**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.40/2013**

**06.03.2026. அ.சா.2 தனலட்சுமி க/பெ. மன்னார்**

A1 to 3 present.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

என் மகன் வெங்கடேசன் இறப்பதற்கு 3 மாதத்திற்கு முன்தான் அம்பிகா என்ற பெண்ணுடன் திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரிதான். வெங்கடேசன் திருமணமே வேண்டாம் என்று சொன்னார் என்றும் நான்தான் அவரை கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல. அம்பிகா என் தம்பி மகள். திருமணத்திற்கு முன் என் மகனுக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு இருந்தது என்றால் அப்படி எதுவும் இல்லை. என் இரண்டு மகன்கள் அவர் குடும்பத்தினர் அனைவரும் ஒரே இடத்தில் தான் கூட்டாக இருக்கிறோம். வெங்கடேசன் கைப்பேசி வைத்திருந்தார். அவர் மளிகைக்கடை நடத்தி வந்தார். நான் மன்னார்பாளையம் ஊராட்சி மன்ற ஆரம்ப பள்ளியில் சமையல் வேலை செய்திருந்தேன் என்றால் சரிதான். நான் பள்ளியில் இருக்கும்போது என் மகன் இறந்த தகவல் கிடைத்ததா என்றால் நான் வீட்டுக்கு வந்த பிறகுதான் தெரிந்தது. அன்றைய தினம் ஒரு இறப்பிற்காக தச்சம்பட்டு சென்றிருந்தேன் என்றால் சரிதான். மதியம் 12.00 மணிக்கு வீட்டுக்கு வந்தேன். என் மகன் இறந்த அன்று போலிசார் விசாரித்தார்களா அல்லது மறுநாள் விசாரித்தார்களா என்றால் இறந்த அன்றே விசாரித்தார்கள். எதிரிகள் என் மகனை அடித்ததை நான் நேரடியாக பார்த்தேன். அவ்வாறு நான் பார்த்திருந்தால் நான் தடுத்திருப்பேன் என்றும் எனக்கும் காயம் ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் எனக்கு சம்பவத்திற்கு 1 மாதத்திற்கு முன் கண் ஆபரேஷன் செய்ததால் என்னால் எதுவும் செய்யமுடியவில்லை. என் மருமகள் சாந்திக்கு குழந்தை இல்லை. எதிரி குடும்பத்திற்கும் எங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்தது என்றால் அப்படி எதுவும் இல்லை. அந்த முன்விரோதத்தால் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகன் வெங்கடேசனுக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு இருந்தது என்றும் நாங்கள் அவரை கட்டாயப்படுத்தி திருமணம்செய்து வைத்ததால் அவர் மனஅழுத்ததில் இருந்து வந்து தற்கொலை செய்து கொண்டார் என்றால்

சரியல்ல. என் மகன் இறப்பிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**

Additional District Judge,
Tiruvannamalai.